**MLWA HSS Madurai (Run by Jain Educational & Empowerment Trust)**

**+1 Com Model Qly**

Date : 12-Sep-22

11th Standard

வணிகவியல்

Reg.No. :

**Prepared by M.MuthuSelvam Cell No: 9842104826**

Exam Time : 03:00:00 Hrs

Total Marks : 90

## பகுதி - அ சரியான விடையை தேர்ந்தெடு

20 x 1 = 20

1) வியாபாரம் மற்றும் வணிகம் _____ பேரரசில் பொதுவானவையாக இருந்தது
(a) பல்லவர் (b) சோழர் (c) பாண்டியர் (d) சேரர்

2) பட்டியல் I -ல் உள்ளவற்றை பட்டில் II உடன் பொருத்திப் பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையை தெரிவு செய்க .

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| பொருளாதார நோக்கங்கள் | வேலைவாய்ப்பு |
| சமூக நோக்கங்கள் | நுகர்வோரை திருப்திப்படுத்துதல் |
| நிறுவன நோக்கங்கள் | பொது நலன் |
| தேசிய நோக்கங்கள் | லாபம் ஈட்டுவது |

(a) 1 2 3 4 (b) 4 3 2 1 (c) 2 3 1 4 (d) 3 4 1 2

3) எந்த அமைப்பு ஒரே ஒருவராக உரிமையாளர் நிறுவனர் மற்றும் மேலாளர் என்ற வகையில் இருக்கும்
(a) கூட்டு நிறுவனம் (b) அரசு நிறுவனம் (c) கூட்டுறவுச் சங்கம் (d) தனியாள் வணிகம்

4) .............சட்டத்தின் படி ஆண் வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவர்கள்
(a) இந்துச் சட்டம் (b) மிடாக்சரா சட்டம் (c) தயாபாகா சட்டம் (d) மேற்கண்ட யாவும்

5) கீழ்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க.
கூற்று (A) : அனைத்து கூட்டாளிகளும் ஒப்புக் கொண்டால் ஒரு கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படலாம்
காரணம் (R ) : ஒரு கூட்டாண்மை நிறுவனம் கூட்டாளிகளின் உடன்பாட்டால் உருவாக்கப்படுவது போலவே உடன்பாட்டால் கலைக்கப்படலாம்.
விடை : கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டை பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
(a) (A) மற்றும் (R) இரண்டும் சரி (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் உள்ளது.
(b) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.
(c) (A) சரி, ஆனால் (R) தவறு. (d) (A) தவறு, ஆனால் (R) சரி .

6) ஒரு நாட்டின் அரசராலோ, அரசியலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் _____ எனப்படும்
(a) பட்டய (அ) சாசன நிறுமங்கள் (b) சட்டமுறை நிறுமங்கள் (c) பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள்
(d) அயல்நாட்டு நிறுமங்கள்

7) கூட்டுப் பங்கு நிறுமத்தின் பண்புகளாவன
(I )தனியான சட்ட நபர் தன்மையுடையதல்ல
(II) வரையறு பொறுப்பு
(III) நீடித்த வாழ்வு இல்லை
(IV) பொது முத்திரை
(a) (I) மற்றும் (II ) (b) (II) மற்றும் (IV) (c) (I) மற்றும் (IV) (d) (II) மற்றும் (III)

8) அனைத்து கூட்டுறவுகளும் நிறுவப்படுவதற்கு
(a) தொண்டு நிறுவன நோக்கம் (b) சேவை நோக்கம் (c) இலாப நோக்கம் (d) சீர்திருத்த நோக்கம்

9) "பன்னாட்டு நிறுமங்களுக்கு எதிர்காலத்தில் மிகச்சிறந்த எதிர்காலம் இருக்கிறது" எனக் கூறியவர்_______________.
(a) லூயிஸ் எச். ஹேனே (b) ஆலன் லூயி (c) பீட்டர் டிரக்கர் (d) ஊர்விக் மற்றும் ஹண்ட்

10) பொதுத் துறை நிறுவனத்தின் மிகப்பழமையான அமைப்பு
(a) பொதுத் துறை நிறுவனம் (b) துறைவாரி அமைப்பு (c) பன்னாட்டு நிறுவனம் (d) சட்டமுறை நிறுவனம்

11) இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, __________ ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.
(a) 1936 (b) 1935 (c) 1934 (d) 1933

12) இந்திய ரிசர்வ் வங்கியின் தற்போதைய ஆளுநர் யார்?
(a) ரகுராம் ராஜன் (b) உர்ஜித் படேல் (c) சக்திகாந்த தாஸ் (d) அருந்ததி படாசாரியா

13) எந்த ஒரு வகையான முன்கடன்கள் வணிக வங்கியால் வழங்கப்படுவது இல்லை.
(a) வணிகத் தகவலைச் சேகரித்தல் மற்றும் அளித்தல் (b) வங்கி மேல்வரைப்பற்று (c) ரொக்கக் கடன்
(d) உண்டியல்களைத் தள்ளுபடி செய்தல்

14) பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக _____ பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
(a) ஆவணம் (b) தனியார் (c) குளிர் சேமிப்பு (d) கூட்டுறவு

15) மிக வேகமான போக்குவரத்திற்கான வழி என்ன?
(a) தொடர்வண்டி (b) சாலை (c) கடல் (d) விமானம்

16) பின்வருவனவற்றுள் எது கடல் சார் காப்பீடு வகையினைச் சார்ந்தது?
(a) பணம் திருப்பத் திட்டாவணம் (b) மருத்துவ கோருரிமை (c) கப்பல் சார் காப்பீடு (d) காஸ்கோ காப்பீடு

17) மின்னணு வலைப்பின்னல்கள் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் _______ என அழைக்கப்படுகிறது.
(a) மின்னணு வணிகம் (b) இணையதளம் (c) வலைதளம் (d) வர்த்தகம்

18) புற ஒப்படைப்பின் முக்கிய நன்மை _______
(a) உற்பத்திதிறன் (b) செலவு குறைப்பு (c) திறன் (d) அலகுகள்

19) பின்வருவனவற்றில் எது ஊழியர்களின் சமூக பொறுப்புணர்வு ஆகாது


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

(a) நியாமான ஊதியம் (b) சரியான வசதிகள் (c) சமூக பாதுகாப்பு (d) சுரண்டல்

20) வைப்பு இரசீது வெளியிடு இதன் தேவை அதிகரிப்பை அடிப்படையாக கொண்டது
(a) பன்னாட்டு சந்தை (b) உள்ளூர் சந்தை (c) தற்போதைய பங்குதாரர்கள் (d) மேற்கண்ட அனைத்தும்

**பகுதி - ஆ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 30 கட்டாய வினா** 7 x 2 = 14

21) நாளங்காடி என்றால் என்ன?
22) கூட்டுறு நிறுவனங்களைப் பற்றி சுருக்கமாக கூறுக
23) கர்த்தா என்பவர் யார்?
24) இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
25) பன்னாட்டு நிறுமம்- இலக்கணம் வரைக
26) பற்று அட்டையின் (debit card)- சிறு குறிப்பு வரைக
27) போக்குவரத்து மூலம் வழங்கப்படும் ஏதேனும் இரண்டு சேவைகளைப் பற்றிக் கூறுக.
28) மருத்துவக் காப்பீடு என்றால் என்ன?
29) அஞ்சலக சேமிப்பு திட்டங்கள் ஏதேனும் இரண்டை குறிப்பிடுக.
30) மலைப்பாங்கான பகுதிகள், காட்டுப் பகுதிகள் மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் பயன்படுத்தப்படும் பழமையான போக்குவரத்து ஏதேனும் இரண்டு கூறுக.

**பகுதி - இ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 40 கட்டாய வினா** 7 x 3 = 21

31) பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
32) வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
33) அயல்நாட்டு நிறுமம் என்றால் என்ன?
34) பொது கழகங்கள் என்றால் என்ன?
35) உண்மை நேர மொத்தத் தீர்வக அமைப்பு (RTGS) பற்றி ஒரு குறுகிய குறிப்பு எழுதுக.
36) இந்தியக் காப்பீட்டு ஒழுங்கமைப்பு ஆணையம் (IRDAI) என்றால் என்ன?
37) தனி உரிமையியலின் வகைகள் யாவை?
38) சமூகப் பொறுப்புணர்வு என்பதன் பொருளுக்கான இலக்கணம் தருக
39) பன்னாட்டு நிதியின் முக்கியத்துவம் யாது?
40) கோவிந்த் என்பவர் சொந்தமாகத் தொழில் தொடங்கினார். அவருடைய தந்தை கணக்குகளை பராமரிக்கவும், சகோதரர் மாலையில் வாடிக்கையாளர்களைப் பார்த்துக் கொள்ள உதவினர். கோவிந்த் தந்தைக்கும், சகோதரருக்கும் மாதச் சம்பளம் வழங்கினார். இது எவ்விதமான வியாபார அமைப்பு எனக் கூறுக.மேலும் அவ்வியாபார அமைப்பின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளைக் கூறுக.

**பகுதி - ஈ அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 x 5 = 35

41) a) வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக

**(OR)**

b) வணிக வங்கிகளின் பல்வேறு வகையான இரண்டாம் நிலை செயல்பாடுகளை விளக்குக.

42) a) தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை?

**(OR)**

b) பண்டகக் காப்பின் நன்மைகளை விவரி

43) a) கூட்டாண்மை கலைப்பின் வகைகளை விவரி

**(OR)**

b) போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரிக்க.

44) a) அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?

**(OR)**

b) காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி.

45) a) பன்னாட்டு நிறுமத்தின் நன்மைகளை விவரி.

**(OR)**

b) தனி உரிமையியலின் நன்மைகளைக் கூறுக.

46) a) பொது கழகத்தின் இயல்புகள் யாவை ?

**(OR)**

b) உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

47) a) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக.

**(OR)**

b) ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.

**மகத்தான காரியங்களுக்கு.. மகத்தான நம்பிக்கைகளே பிறப்பிடம்..**

*******************************************

Padasalai.Net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# MLWA HSS Madurai (Run by Jain Educational & Empowerment Trust)

**+1 Com Model Qly**

Date : 11-Sep-22

11th Standard

Reg.No. :

## வணிகவியல்

**Prepared by M.MuthuSelvam Cell No: 9842104826**

Time : 03:00:00 Hrs

Total Marks : 90

## பகுதி - அ சரியான விடையை தேர்ந்தெடு

20 x 1 = 20

1) (c) பாண்டியர்
2) (b) 4 3 2 1
3) (d) தனியாள் வணிகம்
4) (b) மிடாக்சரா சட்டம்
5) (b) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.
6) (a) பட்டய (அ) சாசன நிறுமங்கள்
7) (b) (II) மற்றும் (IV)
8) (b) சேவை நோக்கம்
9) (c) பீட்டர் டிரக்கர்
10) (b) துறைவாரி அமைப்பு
11) (b) 1935
12) (c) சக்திகாந்த தாஸ்
13) (a) வணிகத் தகவலைச் சேகரித்தல் மற்றும் அளித்தல்
14) (c) குளிர் சேமிப்பு
15) (d) விமானம்
16) (c) கப்பல் சார் காப்பீடு
17) (a) மின்னணு வணிகம்
18) (b) செலவு குறைப்பு
19) (d) சுரண்டல்
20) (a) பன்னாட்டு சந்தை

## பகுதி - ஆ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 30 கட்டாய வினா

7 x 2 = 14

21) பகலில் வியாபாரம் நடைபெறுவதை நாளங்காடி என அழைக்கப்படுகிறது.
22) கூட்டுருவாக்கம் பெற்ற நிறுவனங்கள் கூட்டுப்பங்கு நிறுமம், கூட்டுறவுச் சங்கம்.
23) இந்து கூட்டுக் குடும்பத்தின் வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது ஒரு நபர் மட்டுமே. அவர் "கர்த்தா" அல்லது "மேலாளர்" என்று அழைக்கப்படுகிறார் .
24) முதலில் கூட்டுறவு இயக்கம் 1844-ஆம் ஆண்டு ராபர்ட் ஓவன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இங்கிலாந்தில் 28 நெசவாளர் உறுப்பினர்களைக் கொண்ட நுகர்வோர் கூட்டுறவு சமுதாயத்தை உருவாக்கி, ராக்டேல் சமமான முன்னோடிகளின் சொசைட்டி என்று அவர் அழைத்தார்.
25) பன்னாட்டு நிறுவனம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும். -நைல் H.ஜேகோபி.
"ஒரு பன்னாட்டு நிறுமம் என்பது ஒரு வியாபாரத்தைத் தொடங்கி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் மேலாண்மை செய்து வருவதாகும்.
26) (i) தானியங்கி பணம் வழங்கும் அட்டையே பற்று அட்டை என்றும் அழைக்கப்படுகிறது.
(ii) இந்தியாவின் எந்தப் பகுதியிலும் பொருள்களை வாங்கவோ அல்லது சேவைகளைப் பெறவோ அதிக அளவில் இந்த அட்டை பயன்படுகிறது.
27) (i) உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது : பொருளின் உற்பத்தி நோக்கம் நுகர்வு ஆகும்.பயனுள்ள போக்குவரத்து முறை காலம் மற்றும் இட வசதிகளை உருவாக்குவதன் மூலம் பொருட்களின் தேவை மற்றும் பொருட்களின் மதிப்பு குறிப்பிட்ட விளைவுகளை ஏற்படுத்துகிறது.
(ii) பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது : மூலப் பொருட்கள்,எரிபொருள்,உழைப்பு மற்றும் முடிந்த தயாரிப்புகள் மற்றும் மூலதன பயன்பாடு மற்றும் தொழில் நுட்பத்தை எப்படி பயன்படுத்துவது போன்றவைகளுக்கு உதவுகிறது.
28) (i) பொதி விலங்குகள்
(ii) மாட்டு வண்டிகள்
29) மருத்துவக் காப்பீடு என்பது காப்பீட்டு நிறுவனங்களுக்கும் தனி நபர்கள் அல்லது மனிதக் குழுக்களுக்கும் இடையே ஏற்படும் ஒப்பந்தம் ஆகும்.இந்த ஒப்பந்தப்படி காப்பீடு தருநர் குறிப்பிட்ட அளவு முனைமம் பெற்றுக் கொண்டு குறித்த காலத்திற்கும் உடல் நலக் காப்பீட்டை வழங்க ஒப்புக் கொள்கிறார்.
30) அஞ்சலக சேமிப்பு கணக்கு, அஞ்சலக தொடர் வைப்புக் கணக்கு, அஞ்சலக நிலை வைப்புக் கணக்கு, அஞ்சலக மாதாந்திர வருவாய் கணக்கு திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம், பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு, கிசான் விகாஸ் பத்திரங்கள், சுகன்யா சமரித்தி கணக்கு.

## பகுதி - இ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 40 கட்டாய வினா

7 x 3 = 21

31) பாண்டியர் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் கொற்கை, சாலியூர், காயல்பட்டினம், மருங்காவூர்பட்டினம், குமரி ஆகிய இடங்கள் ஆகும்.
32) தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாது. அதன் விளைவாக அவரது வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லையென்றால் தன சொந்த சொத்துக்களிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும். எனவே அவரின் பொறுப்பு முதலீட்டுத் தொகையுடன் நின்று விடாமல், தன் சொந்த சொத்திற்கு ஈடாகிறது. இதனையே வரையறாப் பொறுப்பு என்கிறோம்.
33)


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

இது தனியாள் வணிக அமைப்பைச் சார்ந்தது.
**குறைபாடுகள் :**
**(i ) அளவான முதல் :**
1. தனியாள் வணிகரின் மூலதனம் வரையறுக்கப்பட்டது. ஆகவே அவரின் வியாபார நடவடிக்கைகள் ஓர் எல்லையைத் தாண்டிச் செல்ல வாய்ப்புக் குறைவு.
2. அவரின் **கடன் பெறும் திறனும் குறைவாகவே இருப்பதாலும்** மற்றும் அதிகமான மூலதனம் தேவைப்படும் தொழிலைத் துவக்க முடியாமையும் குறைபாடுகளாக இருக்கின்றன.
**(ii) வரையறாப் பொறுப்பு :**
1. வியாபாரத்தின் உரிமையாளரின் பொறுப்பு என்பது வரையறுக்கப்படாதது.
2. கடனீந்தோர்கள் தமது கடன்களைத் தனியாள் வணிகரின் சொந்தச் சொத்துக்களிலிருந்தும் சரிக்கட்டிக் கொள்ள வாய்ப்பு இருப்பதால், தனிநபரின் பொறுப்பு வரையறாப் பொறுப்பாக உள்ளது.

34) ஒரு நிறுமம் இந்தியாவிற்கு அப்பால் பதிவு செய்யப்பட்டு இந்தியாவில் தொழிலிடம் உள்ள நிறுமம் அயல்நாட்டு நிறுமம் எனப்படும். இந்தியாவில் நிருமத்தை அமைப்பதற்குப் பின்வரும் ஆவணங்களை கண்டிப்பாக 30 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும். அவைகள்
(i) சாசனத்தின் சான்றிதழ் நகல் அல்லது கூட்டுருவாத்தின் சான்றிதழ் (அ) அமைப்பு முறையேடு மற்றும் சங்க நடைமுறை வழிகள் ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
(ii) நிறுமம் பதிவு அலுவலகம் உள்ள இடம்
(iii) இயக்குநர் மற்றும் செயலரின் பட்டியல்.
(iv) இந்தியாவின் தலைமை வியாபார அலுவலகத்தின் முகவரி.
(v) நிறுமச் செயல்பாடுகளுக்கு ஒப்புதல் வழங்கிய இந்திய குடிமகனின் பெயர் மற்றும் முகவரி.

35)

36) (i) இது 2013 இல் இந்திய ரிசர்வ் வங்கியால் தொடக்கப்பட்டது.
(ii) பரிவர்த்தனைகள் உண்மையான நேரத்தின் அடிப்படையில் தீர்க்கப்டுகின்றன.
(iii) மற்ற தீர்க்க எந்த நடவடிக்கைகளையும் தொகுக்காமல் ஒரு வங்கிக்கும் மற்றொரு வங்கிக்கும் இடையே ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் தீர்வாக காணப்படுகிறது.
(iv) RTGS வசதி வார நாட்களில் காலை 9.00 மணி முதல் 4.30 மணி வரையும் சனிக்கிழமைகளில் 2.00 மணி வரை கிடைக்கின்றன.
(v) RTGS பரிமாற்றங்கள் ஞாயிற்றுக்கிழமை மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் அனுமதிக்கப்படுவதில்லை.
(vi) RTGS பரிவர்த்தனைக்கான குறைந்தபட்ச வரம்பு ரூபாய் 2 லட்சம் ஆகும்.

37) (i) இந்திய காப்பீடு ஒழுங்குமுறை ஆணையம் Insurance Regulatory Development Authority of India):
இந்தியாவிலுள்ள காப்பீட்டு நிலையங்கள் யாவும் மேற்பார்வை செய்து ஒழுங்குபடுத்த ஓர் உயரிய தலைமை அமைப்பாக தனித்துச் செயல்படும் சட்டப்படியான ஆணையம் இந்தியக் காப்பீட்டு வளர்ச்சி ஒழுங்கமைப்பு ஆணையம் ஆகும்.
(ii) இந்திய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட(IRDAI Act 1999) சட்டத்தின் படி 2000ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.இதன் தலைமை அலுவலகம் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள ஹைதராபாத் நகரில் உள்ளது.
(iii) IRDAI அமைப்பு முறை : இந்தியக் காப்பீடு ஒழுங்கமைப்பு ஆணையத்தின் அமைப்பு முறையில் பத்து பேர் கொண்ட குழுவில்,
1.நடுவண் அரசால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவர் (ஐந்து ஆண்டுகளுக்கு,உயர்ந்தபட்ச வயது 60).
2.ஐந்து முழு நேர உறுப்பினர்கள் (உயர்ந்த பட்ச வயது 62).
3.நான்கு பகுதி நேர உறுப்பினர்கள் (5 ஆண்டுகளுக்கு மிகாமல் என்ற அடிப்படையில்) உருவாக்கப்பட்டது.

38) (i) தனி உரிமையியல் இரு பிரிவுகளாக பிரிக்கப்படுவது அவை,
(ii) தயாரிப்பு பொருள் அல்லது வர்த்தகப் பெயர் தனி உரிமையாக்கல், வணிக வடிவமைப்பு தனி உரிமை.

39) சமுதாய பொதுநலன் மேம்பாடு கருதி, உரிய நபர், சமுதாய நம்பிக்கைக்குரிய அடிப்படை மேன்மை, சமுதாய ஒற்றுமை உறுதித்தன்மை, மற்றும் நிலைத்தன்மை போன்றவற்றில் பங்களிப்பை ஏற்படுத்துவது ஆகும்.பீட்டர் எஃப் டிரக்கர்.

40) (i) பன்னாட்டு நிதியில் பல்வேறு நாடுகளின் நாணய ஒப்பீட்டு மதிப்புக்களையும் மற்றும் அதன் மாற்று விகிதங்களையும் நிர்ணயிப்பதில் உதவி புரிகிறது.
(ii) இது பல்வேறு நாடுகளின் பணவீக்க வீதங்களை ஒப்பிட்டு, எந்த நாட்டுப் பாத்திரங்களில் முதலீடு செய்வது என்ற முடிவுகளை முதலீட்டாளர்கள் எடுக்க உதவுகிறது.
(iii) இது பல்வேறு நாடுகளின் பொருளாதார நிலைமைகளை அறிந்து கொள்வதற்கும் மற்றும், சந்தை நிலவரங்களை தெரிந்து கொள்வதற்கும் உதவுகிறது.
(iv) பன்னாட்டு நிதி அறிக்கை அமைப்பின் (IFRS) மூலம் பல்வேறு நாடுகளின் நிதி அறிக்கைகளை ஒப்பாய்வு செய்ய உதவுகிறது.
(v) இது பன்னாட்டு நிதி அமைப்புக்களின் அடிப்படை கட்டமைப்புகளைப் அறிந்து கொள்ளவும் மற்றும் அவற்றிடையே சீர்நிலையைப் பராமரிப்பதற்கும் உதவுகிறது.
(vi) பன்னாட்டுப் பணவியல் நிதியம், உலக வங்கி போன்ற நிதி அமைப்புகள், பல்வேறு நாடுகளிடையே எழும் நிதி சார்ந்த பிரச்சனைகளில் தலையிட்டு அவற்றை சுமுகமாக தீர்க்க உதவுகின்றன.

**பகுதி - ஈ அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 x 5 = 35

41) a)
(i) ஆள்சார் தடை
(ii) இடத்தடை
(iii) காலத்தடை
(iv) இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்க தடை
(v) நட்ட இடர்பாட்டு தடை
(vi) அறிசார் தடை
(vii) பண்டப் பரிமாற்றத் தடை
(viii) நிதித் தடை
(ix) பொருட்களைத் துல்லியமாக தயாரிப்பத்தில் தடை
(x) பொருட்களை உற்பத்தி செய்கின்ற இடத்திலிருந்து நுகர்வோருக்கு நேரடி வீட்டிற்கு கொண்டு செல்லுதல்.

**(OR)**

b)
அடிப்படை அல்லது முதன்மை செயல்பாடுகளைத் தவிர வணிக வங்கிகள் பல்வேறு வகையான பிற சேவைகளையும் வழங்குகின்றன.அவை இரண்டாம் நிலை செயல்பாடுகள் எனப்படுகின்றன.இந்தச் சேவைகளைப் பொதுவாக முகமை செயல்பாடுகள் மற்றும் பொதுப் பயன்பாட்டு செயல்பாடுகள் என வகைப்படுத்தலாம்.
முகமைகள் பணிகள்:
(i) நிதிப் பரிமாற்றம்: வங்கிகள் கேட்பு வரைவோலைகள் காசோலைகள் பயணிகள் காசோலைகள் போன்றவைகளை வெளியிடுவதுடன் ஒரு இடத்திலிருந்த இன்னொரு இடத்திற்கு நிதிகளை மாற்ற உதவுகிறது.
(ii) காலமுறையில் செலுத்தும் முனைமம் வாடகை முதலியன:
வாடிக்கையாளர்களிடமிருந்து வரும் அறிவுறுத்தலின்படி காப்பீட்டு முனைமம் வாடகை தொலைபேசி கட்டணம் போன்றவை.
(iii) காசோலைகள் பெறுதல் மற்றும் செலுத்தல்: வாடிக்கையாளர்களின் சார்பாக வங்கிகள் மற்ற வங்கிகளின் காசோலைகளை வசூலித்து வாடிக்கையாளர்களின் கணக்கில் வரவு வைக்கிறது.
(iv) பங்கு சந்தை பரிவர்த்தனைகள் நடத்துதல்: ஒரு டீமேட் மின்னணு கணக்கு வைப்பாளரால் தொடங்கப்பட வேண்டடும்.
(v) வருமான வரிக் கணக்கைத் தயாரித்தல்: வாடிக்கையாளர்களின் சார்பில் வங்கிகள் வருமானக் கணக்கினை ஆண்டு தோறும் தயாரிக்கின்றன.
(vi) அந்நியச் செலாவணி வர்த்தகத்தில் ஈடுபடுதல்: வாடிக்கையாளர்களின் சார்பில் வங்கிகள் வெளிநாட்டு நாணய மதிப்பை வாங்குதல் மற்றும் விற்றல் பணியை செய்கிறது.
(vii) தொடர்பாளராகச் செயல்படுதல்: வாடிக்கையாளர்களுக்கு தொடர்பாளராக செயல்பட்டு பயணசீட்டு, கடவுச்சீட்டு போன்றவைகளைப் பெறுகிறது.

42) a)


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

(i) தனி நபர் உரிமை: இது தனி நபரால் நடத்தக் கூடிய அமைப்பாகும். தனியாள் வணிகர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். தனியாள் வணிகத்தில் அவர் ஒருவரே உரிமையாளராக இல்லாவிட்டாலும் அதன் அமைப்பு முழுவதையும் அவரே கட்டுப்படுத்துகிறார்.
(ii) தலையீடற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு: தனியாள் வணிகர் தனது வியாபாரத்தில் தலையீடின்றிச் செயல்படுகிறார். தனி உரிமையாளர் உடனடியாகவும் முடிவு எடுக்கிறார்.
(iii) வரையறாப் பொறுப்பு: தனியார் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக அவரது வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லையென்றால் தான் சொந்த சொத்துக்களை பறிமுதல் செய்ய கடனீந்தோருக்கு உரிமை உண்டு.
(iv) முழு இலாபத்தையும் அனுபவித்தல்: அந்நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை தனியாள் வணிகருக்கு உண்டு. தனது கடின உழைப்பின் மூலம் ஈட்டிய இலாபத்தின் உந்துதலால் அவர் தனது வணிகத்தை மேலும் விரிவாக்கம் செய்கிறார்.
(v) அரசின் விதிமுறைகள் பின்பற்றாமை: தனியாள் வணிகர் அரசின் விதிமுறைகளின்படி குறுக்கீடு இன்றிச் செயல்படுகிறார். இவ்வமைப்பை உருவாக்குவதிலோ, மேலாண்மை செய்வதிலோ அல்லது கலைப்பதிலோ, அரசின் விதிமுறைகள் பின்பற்ற வேண்டிய கட்டாயம் இல்லை.
(vi) குறைந்த மூலதனம் மற்றும் வரையறுக்கப்பட்ட மேலாண்மை திறன்: தனியாள் வணிகர் தனி ஒருவரே மூலதனம் வழங்குவதால் அது சிறிய அளவிலேயே இருக்கும். அதனால் நிதித்தடை ஏற்பட்ட வாய்ப்புகள் அதிகம். தனி உரிமையாளரின் மேலாண்மை திறன் குட குறைவாக இருக்கும் சூழ்நிலையில் நிறுவன விரிவாக்கம் பாதிக்கப்படலாம்.
(vii) தனி நிறுவனங்களின் நீடித்த வாழ்வு: தனியாள் வணிகத்திற்கு நீடித்த வாழ்வு கிடையாது. அவரின் இறப்பு, வியாபாரம் செய்யும் திறனை இழத்தல், வாரிசுயின்மை இவையே வணிகத்தை முடிவுக்கு கொண்டு வரும்.
(viii) வியாபாரம் இரகசியம் காத்தல் : தனியாள் வணிகத்தில் அவர் ஒருவரே உரிமையாளராதலால் தனது தொழில் பற்றிய இரகசியத்தை எளிதாக காப்பாற்றலாம்.

**(OR)**

b)

**பண்டக காப்பின் நன்மைகள்**

1. சரக்குகளை சேமித்து வைக்க இட வசதி இல்லா வியாபாரிகளின் சரக்குகளை பாதுகாக பயன்படுகின்றது.
2.சரக்குகள் மொத்தமாக சேமித்து வைப்பது மூலம் வியாபாரிகளின் விநியோக செலவுகளை குறைக்கிறது மற்றும் வியாபாரிகள் தங்களுக் தேவைப்படும் பொருட்களை சிறிய அளவி எடுத்துக்கொள்ள உதவுகிறது.
3.இது வழங்கல் வழியை தீர்மானிக்க உதவுகிறது உறபத்தியாளர் இதன் மூலம் மொத்த வியாபா அல்லது சில்லறை வியாபாரி நியமிக்கலாம் என முடிவு செய்ய உதவுகின்றது.
4.இது ஆண்டு முழுவதும் விற்பனைக்கு உதவுகிறது மற்றும் பொருள் இல்லை என்ற நிலை ஏற்படாமல் தவிர்க்கிறது. 5.திறமையான மற்றும் திறமையற்ற தொழிலாளர்கள் இருவருக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துகின்றது.

43) a)

**நீதிமன்ற ஆணையில்லா கலைப்பு:**
**(i) கூட்டாளிகளின் உடன்பாட்டால் கலைப்பு:** ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் உருவாக்கப்படுகிறது. அனைத்து கூட்டாளிகளும் ஒன்று சேர்ந்து அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படலாம்.
**(ii) ஒருவர் தவிர அனைத்துக் கூட்டாளிகளும் நொடிப்பு நிலை:** ஏதாவது ஒருவர் நொடிப்புநிலை அடைந்தாலோ அல்லது அனைத்துக் கூட்டாளிகளும் நொடிப்பு நிலை அடைந்தாலோ நிறுவனம் கலைப்பு ஏற்படும்.
**(iii) சட்டத்திற்கு புறம்பான செயலால்:** கூட்டாண்மை நிறுவனத்தில் சட்டத்திற்கு புறம்பாக தொழிலில் ஈடுபட்டிருந்தால் தானாகவே நிறுவனம் கலைக்கப்படலாம்.
**(iv) விருப்பமுறிக் கூட்டாண்மையின் அறிவிக்கையால் கலைப்பு:** விருப்பமுறிக் கூட்டாண் மையில் ஏதாவது ஒரு கூட்டாளி கடிதம் மூலம் அனைத்துக் கூட்டாளிகளுக்கும் தனது விருப்பமான கலைப்பை தெரிவித்தால் நிறுவனக் கலைப்பு ஏற்படும்.
**(v) சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால்கலைப்பு:**
1. குறிப்பிட்ட காலத்திற்கான கூட்டாண்மையின் அக்காலம் முடிவடைந்தவுடன்,
2. குறிப்பிட்ட தொழில் களைச் செய்ய மட்டுமே தொடங்கப்பட்டிருப்பின் தொழில் நிறைவு பெற்றவுடன்.|
3. கூட்டாளி இறந்து விட்டால்.
4. கூட்டாளி விலகலின் பொழுது,
5. கூட்டாளி நொடிப்பு நிலை அடையும் போது.

**நீதிமன்றத்தால் கலைப்பு:**
(i) கூட்டாளி பைத்திய நிலையானால்
(ii) நிலையான திறமையின்மை
(iii) கூட்டாளி ஒருவரின் ஒழுக்கக்கேடு
(iv) உடன்பாட்டை தொடர்ந்து மீறுகை
(v) உரிமை மாற்றம்
(vi) தொடர் நட்டம்
(vii) நீதி நேர்மை அடிப்படையில்.

**(OR)**

b)

Padasalai.Net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

போக்குவரத்து வகைகள் - நிலப் போக்குவரத்து , நீர் போக்குவரத்து , விமான போக்குவரத்து.
நிலப் போக்குவரத்து :
(i) நில வாகனப் போக்குவரத்து மூலம் மக்கள் மற்றும் பொருட்கள் கொண்டு செல்லப்படுவதை நிலப் போக்குவரத்து என்றழைக்கிறோம்.
(ii) பொதி விலங்குகள் : மலை , காடு மற்றும் பாலைவனம் போன்ற பின் தங்கிய பகுதிகளிலும் சிறு சிறு சுமைகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும்.
(iii) குதிரை கோவேறு கழுதை, கழுதை ஒட்டகம் மற்றும் யானை போன்ற விலங்குகளை பொதி விலங்குகள் என்றழைக்கின்றோம்.
(iv) மாட்டு வண்டிகள்: இந்தியாவில் பொருள் மற்றும் மக்களை ஏற்றிச் செல்வதற்குக் கிராமப் பகுதிகளில் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் சாலைப் போக்குவரத்து மாட்டு வண்டிகளே ஆகும்.
(v) சாலை போக்குவரத்து : சாலை போக்குவரத்து என்பது குறுகிய மற்றும் நடுத்தர தூரத்திற்கு ஏற்றதாகவும், சக்தி வாய்ந்ததாகவும் உள்ளது.பல்வேறு இடங்களில் சாலைகள் அமைப்பதன் மூலம் நாட்டிலுள்ள பிரதான தேசிய வழியில் இணையாமல் தொலை தூரத்தில் உள்ள கிராமப் புறங்களில் வாழும் பெரும்பாலான மக்களை இணைத்து அடிப்படை உள் கட்டமைப்புகளை இது வழங்குகிறது.
(vi) இயந்திர சரக்கேற்றிகள் மற்றும் பேருந்துகள்: நகரத்தின் தொடக்கத்தில் இருந்தே மக்களை சாலைகள் அமைத்தும் சக்கரம் பூட்டிய வண்டிகளைப் பயன்படுத்தியும் பொருள்கள் மற்றும் மக்களை ஏற்றிச் சென்று போக்குவரத்தினை எளிமைப்படுத்தியுள்ளனர்.
(vii) டிராம் வண்டிகள் : =டிராம் வண்டிகள் முதலில் குதிரைகளாலும் பின்னர் நீராவி சக்தியாலும் இப்போது மின்சாரத்தினாலும் இயக்கப்படுகிறது.
(viii) தொடர் வண்டிப் போக்குவரத்து : ஜேம்ஸ் வாட் அவர்களின் கண்டுபிடிப்பான நீராவி இயந்திரம் உலகெங்கிலும் உள்ள போக்குவரத்து முறையில் மாபெரும் புரட்சியினை ஏற்படுத்தியது.நீண்ட தூரத்திற்கு மேல் கனரக சரக்குகளைச் சுமந்து செல்வதற்குத் தொடர் வண்டிகள் மலிவான மற்றும் விரைவான வழிவகைகளாக இருக்கின்றன.
நீர் போக்குவரத்து :
(i) நீர் இயற்கை கொடுத்த வெகுமதி ஆகும்.மனித நாகரீகம்,அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் படிப்படியான பயன்பாடு மூலம் பொருளாதார அரசியல் மற்றும்இராணுவ நடவடிக்கைகளுக்கு தண்ணீர் வளங்களைப் பயன்படுத்துகிறது.
(ii) நீர் போக்குவரத்து இரண்டு வகைகள் : உள்நாட்டு நீர் வழி, பெருங்கடல் நீர் வழி.
விமான போக்குவரத்து :
(i) விமான போக்குவரத்து வேகமான மற்றும் விலையுயர்ந்த போக்குவரத்து முறை ஆகும்.
(ii) உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்கள்.
போக்குவரத்து சமீபத்திய வளர்ச்சிகள்:
மெட்ரோ இரயில் , மோனோ இரயில், புல்லட் இரயில், குழாய் போக்குவரத்து ,கன்வேயர் போக்குவரத்து , கயிறு வழிப் போக்குவரத்து , உயர் சுழற்சி வளையப் போக்குவரத்து.

44) a)

**(i) பெயர் குறித்த உட்பிரிவு:** பெயர் குறித்த உட்பிரிவில் ஒரு நிறுவனத்திற்குச் சட்டப்பூர்மாக அங்கீகரித்த பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள நிறுமத்தின் பெயரை ஒத்திருத்தல் கூடாது. அமைப்பு முறையேட்டில்உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளதால் நிறுமத்தின் பெயருடன் வரையறுக்கப்பட்டது என்ற வார்த்தையைச் சேர்க்க வேண்டும்.
**(ii) இடங்குறித்த உட்பிரிவு:** இப்பிரிவு நிறுமத்தின் பதிவு அலுவலகம் எங்கு அமைந்துள்ளது என்பது பற்றித் தெரிவிக்கிறது. தொழில் தொடங்குவதற்கு முன்பே நிறுமத்தின் பதிவு அலுவலகம் இருக்கும் இடத்தை தெரிவிக்க வேண்டும்.
**(iii) நோக்கம் குறித்த உட்பிரிவு:** நிறுமத்தால் செயல்படுத்தக்கூடிய நோக்கங்கள் அனைத்தும் இதில் குறிப்பிடபட்டிருக்கும் பங்குதாரர்களின் தேவைகளையும் மற்றும் நிதி ஆதாரத்தையும் பயன்படுத்துவது குறித்தும் இதில் விவரங்களிருக்கும்.
**(iv) பொறுப்புக் குறித்த உட்பிரிவு:** பொறுப்பு குறித்த உட்பிரிவு என்பது பொறுப்புறுதி நிறுமமாயின் அது தலைப்பிற்குள்ளாக நேரிடும்போது அதன் நிறுமச் சொத்துக்கள் அந்த நிறுமத்தின் நிதிகள் பொறுப்புகளை தீர்க்க இயலாத நிலையில் ஒவ்வோர் உறுப்பினரும் வழங்குவதாக உத்திரவாதம் அளித்த தொகை இங்குக் குறிப்பிடப்படும்.
**(v) முதல் குறித்த உட்பிரிவு:** முதல் பிரிவு என்பது நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதல், பங்குகளின் வகைகள் மற்றும் பெயரளவு முதல் ஆகியவைப் பற்றி விவரிக்கிறது. நிறுமத்தின் சொத்துக்கள் பற்றியும் இப்பிரிவு விவரிக்கிறது.
**(vi) அமைப்பு உட்பிரிவு:** பங்குதார்கள் தாங்கள் ஒன்றிணைந்து நிறுமமாக செயல்பட விரும்பும் தங்களின் விருப்பத்தை இப்பிரிவு வெளிப்படுத்துகிறது. பொது நிறுமம் எனில் ஏழு நபர்களும், தனி நிறுமம் இரண்டு நபர்களும் சாட்சிகள் முன்னிலையில் கையொப்பம் இட வேண்டும்.

**(OR)**

b)

இடரை பலரால் பகிர்ந்து கொள்ளப்படுவதற்காக காப்பீடு ஏற்படுத்தப்பட்டது.ஒவ்வொரு காப்பீடு ஒப்பந்தமும் கூட்டுறவு தத்துவத்தின் அடிப்படையில் உருவாகிறது.
(i) மிக்க நம்பிக்கை : இக்கோட்பாட்டின்படி காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர்.காப்பீடு பெறுநர் கருப்பொருள் பற்றிய அனைத்து உண்மைகளையும் காப்பீடு தருநகருக்கு தெரியப்படுத்திட வேண்டும்.
(ii) காப்பீடு பெறுநலன் ; காப்பீடு பெறுநருக்கு காப்பீடு செய்யப்பட்டு கருப்பொருள் மீது காப்பீடு பெறுநலன் இருக்க வேண்டும்.காப்பீடு பெறுநலன் என்பது காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது நிதி சார்ந்த அக்கறை இருத்தலை குறிக்கிறது.
(iii) ஈட்டுறுதி : ஒருவருக்கு ஏற்பட்ட உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும்.காப்பீடு பெறுநருக்கு உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டுள்ளதோ அந்த இழப்புக்கு ஈடான தொகை மட்டுமே இழப்பீடாக அளிக்கப்படும்.
(iv) அண்மைக் காரணம் : ஒரு இழப்பு ஏற்பட இரண்டு அதற்கு மேற்பட்ட காரணங்கள் இருப்பின் அதற்குரிய அண்மைக் காரணம் எதுவென காண வேண்டியதை பற்றி குறிப்பிடுவது இக்கோட்பாடு ஆகும்.
(v)பகிர்ந்தளித்தல் : ஒரு கருப்பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருப்பின் அதற்கு இரட்டை காப்பீடு என்று பெயர்.காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினை சம்மந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள் அவரவர் செய்திருக்கின்ற காப்பீட்டு ஒப்பந்த தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படியில் அவரவர்களுக்குள்ள பங்கினை பகிர்ந்து அளித்தல் வேண்டும்.
(vi) பகர உரிமை : 'பகர உரிமை' என்பது ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பை காப்பீடு தருநர் ஈடு செய்த பின் காப்பீடு பெருநர் தனக்குள்ள உரிமைகளை காப்பீடு தருநருக்கு மாற்றிக் கொடுப்பது ஆகும்.காப்பீடு பெறுநர் தனக்கு ஏற்பட்ட உண்மையான இழப்பைக் காட்டிலும் கூடுதலாக ஆதாயம் அடைந்து விடக் கூடாது.
(vii) இழப்பை மட்டுப்படுத்தல்: காப்பீடு பெறுநர் காப்பீடு செய்த கருப்பொருளுக்கு விபத்து நேரும் போது காப்பீடு தருநருக்கு ஏற்படும் இழப்பைக் குறைக்கும் அல்லது மட்டுப்படுத்தும் வண்ணம் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

45) a)


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

(i) குறைந்தபட்சக் கூலி : பன்னாட்ட நிறுவனங்கள் வளங்கள், வசதிகள், அனுபவம், சிறப்பறிவு ஆகியவற்றுடன் இந்நிறுவனங்கள் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களுகாகத் தாராளமாக செலவிட்டுத் தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடிகிறது.
(ii) தரமான பொருட்கள்: பன்னாட்டு நிறுவனங்களின் வளங்கள், வசதிகள், அனுபவம், சிறப்பறிவு ஆகியவற்றுடன் இந்நிறுவனங்கள் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களுகாகத் தாராளமாக செலவிட்டுத் தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடிகிறது.
(ii) பயன்படுத்தப்படாத வளங்களை முறையாகப் பயன்படுத்துதல்: தனது சிறப்புத் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்திப் பன்னாட்டு நிறுவனங்கள் பயன்படுத்தாமல் இருக்க மனித வளங்களையும் மற்றும் பயனற்ற சொத்துக்களையும் முழுமையாகப் பயன்படுத்துவதனால் நாட்டின் தேசிய வருமானம் பெருமளவு உயர்கிறது.
(iv) நாட்டின் செலாவணிச் செலுத்தும் நிலை வளர்ச்சி: பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் தொழில்நுட்ப வளர்ச்சியை பயன்படுத்தாமல் இருக்க மனித வளங்களையும் மற்றும் பயனற்ற சொத்துக்களையும் முழுமையாகப் பயன்படுத்துவதனால் நாட்டின் தேசிய வருமானம் பெருமளவு உயர்கிறது.
(v) தொழில்நுட்ப வளர்ச்சி : பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் தொழில்நுட்ப வளர்ச்சியை ஒரு நாட்டிலிருந்து வேறொரு நாட்டிற்கு மாற்றுவதன் மூலம் தொழில் நுட்ப வளர்ச்சி அடைகிறது.
(vi) மேலாண்மை வளர்ச்சி: மேலாண்மை வளர்ச்சி பன்னாட்டு நிறுவனத்தின் மூலம் அடைகிறது.
(vii) சர்வாதீனத்தைக் கட்டுப்படுத்துகின்றன: பன்னாட்டு நிறுவனம் நாட்டில் போட்டியைத் தூண்டுகின்றன. இதனால் விலை குறைவாகவும் பொருட்கள் தரமாகவும் கிடைக்கின்றன.
(viii) வாழ்க்கை தரம் உயர்கிறது : தரமான பொருட்கள் மூலம் மக்களின் வாழ்க்கை தரம் உயர்கிறது.
(ix) சர்வதேச சகோதரத்தையும் கலாச்சாரத்தையும் காக்கிறது. உலக பொருளாதாரத்தை ஒருங்கிணைத்து செயல்பட இந்நிறுவனங்கள் உதவுகின்றன.

**(OR)**

b)

தனி உரிமையியல் தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உடன்படிக்கை அடிப்படையில் ஏற்படுத்தப்படுகிறது.
(i) தனி உரிமையியலில் கால அளவு 5 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக இருக்கலாம்.மேலும் தொடர்புடைய இருவரின் ஒப்புதலுடன் இந்த தனி உரிமை ஒப்பந்தத்தை புதுப்பிக்கலாம்.
(ii) இத்தகைய தனி உரிமை காலத்தில் எந்த ஒரு போட்டி வாணிபத்தையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நடத்த தனி உரிமம் பெற்றவருக்கு உரிமை இல்லை.மேலும் இந்த உடன்படிக்கை காலத்திற்கு முன் தனி உரிமையை ரத்து செய்ய முடியாது என்ற உத்திரவாதத்தை தனி உரிமை வழங்கியவரால் அளிக்கப்படுகிறது.
(iv) தனி உரிமை கோட்பாட்டின் படி தனி உரிமம் அளித்தவர் தன்னுடைய பொருள் அல்லது சேவையை எந்த முறையில் வழங்குகிறாரோ அல்லது எம்மாதிரியான படிநிலைகளை பின்பற்றுகிறாரோ அதில் சற்றும் வழுவாமல் அவருக்காக வாணிபத்தை ஏற்பாடு செய்து நடத்த உடன்படுகிறார்.
(v) தனி உரிமம் பெற்றவர் தலைமை நிறுவனத்தின் கொள்கைகளுக்கு இணங்க தன்னுடைய வாணிபத்தை தனி உரிமை ஒப்பந்த சரத்துகள் படி முறையாக செயல்படுத்த வேண்டும்.

46) a)

**(OR)**

b)

உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள்

| வேறுபாட்டின் அடிப்படைகள் | வலைகளாவிய வைப்பு இரசீது (GDR) | அமெரிக்க வைப்பு இரசீது(ADR) |
|---|---|---|
| மதிப்பிடுதல் | இது எந்த பணத்தின் மதிப்பிலும் குறிப்பிடப்படும். | இது அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்படும். |
| யாருக்கு இது வெளியிடப்படும் | ஒன்று அல்லது அதற்குமேல் உள்ள சந்தையில் உள்ள முதலீட்டாளருக்கு வெளியிடப்படும். | அமெரிக்கக் குடிமகனாக உள்ள முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும். |
| எங்குப் பட்டியலிடப்படும் | அமெரிக்கா தவிர்த்த இதர பங்கு மாற்றகங்கள்.(எ.கா) இலண்டன் பங்கு மாற்றக வாரியம், லக்சம்பர் பங்கு மாற்றக வாரியம் போன்றவை | அமெரிக்கப் பங்கு மாற்றகங்களில் மட்டும் பட்டியலிடப்படும். |
| ஒப்புதல் | உலகளாவிய இரசீதை வெளியிட அன்னியச் செலாவணி கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் தேவையில்லை. | அமெரிக்க வைப்பு இரசீதை வெளியிட அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக இயக்கத்தின் ஒப்புதல் தேவை. |
| வெளியீட்டு வழிமுறை | உலகளாவிய இரசீதுகள் பட்டியலிடப்பட்ட முழுமையான எண்ணிக்கை உடைய நேர்மைப்பங்குகளாக வெளியிடப்படும். | பல அமெரிக்க வைப்பு இரசீதுகள் தொடர்புடைய சிறு அலகுகளாக பிரிக்கப்பட்ட நேர்மை பங்குகளாக வெளியிடப்படும் |
| மாற்றுகைத்தன்மை | உலகம் முழுவதும் மாற்றக் கூடியது | அமெரிக்காவில் மட்டும் மாற்றத்தக்கது |

47) a)

(i) உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி: சர்வதேச வங்கியில் தரநிலைகளுக்கிணங்க நல்லிணக்கம் மற்றும் நிலைத்தன்மையைப் பராமரிப்பதற்காக இந்திய ரிசர்வ் பேலஸ் குழுவுடன் 1997-ஆம் ஆண்டு முதல் இணைந்து செயல்பட்டு வருகிறது. பன்னாட்டு மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் (IMF) டிசம்பர் 27, 1945 இந்திய அரசின் பிரதிநிதியாக இந்திய ரிசர்வ் வங்கி இருந்து வருகிறது.
(ii) இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒருங்குப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்: நாட்டில் உள்ள அனைத்து வங்கிகளையும் ஒழுங்குபடுத்த விரிவான வழிகாட்டுதல்களை இந்திய ரிசர்வ் வங்கி வகுத்து வழங்கி வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1934 மற்றும் வணிக வங்கிகளின் ஒழுங்கு முறைச் சட்டம் 1949 ஆகியவற்றின் கீழ் வணிக வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல், கட்டுப்படுத்தல் மற்றும் மேற்பார்வையிடுதல் போன்ற அதிகாரங்களை ரிசர்வ் வங்கி கொண்டுள்ளது.
(iii) பணவியல் உச்சநிலை அதிகாரி: விலைவாசி நிலைத்தன்மையையும் பணவீக்கப் போக்குகளையும் ஒழுங்குபடுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் நாட்டின் பணவியல் கொள்கையை இந்திய ரிசர்வ் வங்கி நிர்மாணிக்கிறது. இது விவசாயத்திற்கான நிதிகளை வழங்குதல், திட்டங்களை அமல்படுத்துவதற்கான ஆதாரங்களை திரட்டுதல் வாங்கி கடன் மற்றும் சர்வதேச நிதி சம்பந்தமான சட்டங்களை இயற்றுதல் பற்றிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறது.
(iv) பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்:
பொருளாதாரத்தின் பரந்த அளவுருக்களான வேலைவாய்ப்பு நிலை, அளவுகள் மற்றும் உற்பத்தி அளவு வர்த்தகச் சூழற்சிகள் அயல்நாடுகளின் முதலீட்டு உள்ளீடுகள் மற்றும் செலுத்துதல் சமநிலை போன்றவைகள் இந்திய ரிசர்வ் வங்கி கூர்ந்து கண்காணித்துப் பொருளாதார உறுதித்தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு உதவுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி மேற்பார்வை வல்லுநர் குழு குறைந்தபட்சம் மதத்திற்கு ஒரு முறையாவது கூடிநாடு முழுவதும் நடப்பு நிகழ்வுகள் அனைத்தையும் கவனமாகக் கண்காணித்து முடிவெடுக்கிறது.
(v) புதிய சவால்களுக்கு உடனடியாக பதிலளிப்பது: இந்திய வங்கி அமைப்புக்கு எதிராக எப்பொழுதும் புதிய சவால்கள் எழுந்தாலும், இந்திய ரிசர்வ் வங்கி உடனடியாக ஒரு குழுவினை ஏற்படுத்தி ஆய்வு செய்தல் மற்றும் தலைமை சுற்றறிக்கைகளை வெளியிடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு இந்திய வங்கிகளை வலுப்படுத்துகிறது. ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைகள் மற்றும் வல்லுநர் குழு அறிக்கைகளில் வளம் சேர்க்கும் பல தகவல்களை காணலாம். (எ.கா) கோபால் கிருஷ்ணன் குழு தகவல் பாதுகாப்பு, மின்னணு வங்கி ஏப்ரல் 2010.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

**(OR)**

b)

(i) பொது வருங்கால வைப்பு நிதி (Public Provident Fund) : இந்தியாவில் உள்ள மிகச்சிறந்த முதலீட்டு வாய்ப்புகளில், இது மிகப்பாதுகாப்பான நீண்டகால முதலீட்டு வாய்ப்பாகும். இதற்கு முழுமையான வருமாவரி விலக்கு உண்டு. இந்த வருங்கால வைப்பு நிதி கணக்கை வங்கி அல்லது அஞ்சலகத்தில் ஆரம்பிக்கலாம். இதில் செலுத்தப்படும் தொகை 15 ஆண்டுகளுக்கு முன்பாகத் திரும்பப்பெற முடியாது. பணத்தின் கூட்டு வட்டியைப் பெற முடியும்.

(ii) பரஸ்பர நிதிகள் (Mutual Fund) :பரஸ்பர நிதி என்பது நிதிநிறுமங்கள் பொதுமக்களிடமிருந்து பல்வேறு பரஸ்பர நிதித்திட்டங்கள் மூலமாக திரட்டி பணத்தை, பங்குச் சந்தையில் முதலீடு செய்து, அவை ஈட்டும் இலாபத்தை முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு ஆகும். இதன் மூலம் சாதாரண மக்கள் மறைமுகமாக பங்குச் சந்தையில் பங்கு பெறும் வாய்ப்பை பெறுகின்றனர்.

(iii) அசையாச் சொத்தில் முதலீடு செய்தல்: அசையாச் சொத்தில் முதலீடு செய்தல் என்பது இந்தியாவில் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் முதலீட்டு துறையாகும். ஒரு வீட்டு மனை (Plot) அல்லது அடுக்குமாடி குடியிருப்பு (Flat) வாங்குவது என்பது, மிகச் சிறந்த தனி மனித முதலீட்டிய முறைகளில் ஒன்றாக விளங்குகிறது. ஒரு நிலப்பிரிவு அமைந்துள்ள இடம் மற்றும் அங்குள்ள பிற அடிப்படை வசதிகளைப் பொறுத்து அசையாச் சொத்தின் மதிப்பு பல மடங்கு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது.

(iv) விலையுயர்ந்த உலோகங்களில் முதலீடு செய்தல்: தங்கம், வெள்ளி, பிளாட்டினம் வழிகளில் ஒன்றாகும். சந்தை நிலைக்கேற்றார்போல், உலோகங்களின் மதிப்பு மெதுவாக ஆனால் உறுதியாக அதிகரித்து கொண்டு இருக்கிறது. இவ்வகை முதலீட்டில், முதலீட்டாளர்கள் எந்தவித நட்டமும் இல்லாமல் அவற்றை உடனடியாக பணமாக மாற்றிக் கொள்ள இயலும்.

Padasalai.Net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593